RNI-N0: TNTAM/2021/83936

Postel Regd. No: TN/5/SVA/2023-2025







# மாலை தந்தி

MALAI THANTHI

தமிழால் வெல்வோம்

DAILY EVENING www.malaithanthi.in மாலை நாளிதழ்







சிவகங்கை | மலர்-5 | இதழ்- 175 | ஜூலை.1 2026 புதன்கிழமை | malaithanthi2020@gmail.com | 4 பக்கங்கள் | விலை ரூ. 5


# பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோரை 8 வண்ணங்களில் அடையாளப்படுத்தி கண்காணிப்பில் வைக்க திட்டம்

சென்னை, ஜூலை.01-

பெண்களுக்கு எதிரான குற்றங்களைத் தடுக்கவும், அத்தகைய குற்றங்களில் ஈடுபடுவோரை தீவிரமாக கண்காணிக்க தமிழக காவல்துறை புதிய நடவடிக்கையை அறிமுகப் படுத்தியுள்ளது. அதன்படி, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்களை அவர்களின் குற்றத்தின் தன்மை மற்றும் ஆபத்தின் அடிப்படையில் 8 வண்ணங்களாக பிரித்து கண்காணிக்கும் நடைமுறை அறிமுகப் படுத்தப்பட உள்ளது.

பொதுவாக கொடூர ரவுடிகள், கொலையாளிகள், கூலிப்படையினர் மற்றும் அடிதடி வழக்குகளில் தொடர்புடைய ரவுடிகளை போலீஸார் ஏ பிளஸ், ஏ, பி, சி என 4 பிரிவுகளாக வகைப்படுத்தி தொடர்ந்து கண்காணித்து வருகின்றனர். அவர்கள் சிறையில் இருந்தாலும், ஜாமீனில் வெளியே இருந்தாலும் அல்லது திருந்தி வாழ்ந்தாலும் காவல்துறையின் கண்காணிப்பில் இருப்பார்கள்.



அதேபோன்று, பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுவோரை தனித்தனி வண்ணங்களின் அடிப்படையில் வகைப் படுத்தி, கண்காணிப்பில் வைக்க போலீஸார் முடிவு செய்துள்ளனர்.

8 வண்ணங்கள்

சிவப்பு: கூட்டு பாலியல் வன்கொடுமை மற்றும் குழந்தைகளுக்கு எதிரான மிகக் கடுமையான பாலியல் குற்றங்களில் ஈடுபட்டவர்கள்.

ஆரஞ்சு: பெண்களை தொடர்ந்து பின்தொடர்தல், பாலியல் தொல்லை அளித்தல். சிறார்களுக்கு எதிரான குற்றங்களை மீண்டும் மீண்டும் செய்வோர்.

நீலம்: இணையவழி மற்றும் டிஜிட்டல் தளங்கள் மூலம் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்கள்.

ஊதா: மூன்றாம் பாலினத்தவர், டேட்டிங் செயலிகள் மற்றும் இணைய தளங்களை பயன்படுத்தி குற்றச் செயல்களில் ஈடுபடுவோர்.

கருப்பு: பெண்கள், சிறார்களை கடத்தல் மற்றும் பாலியல் குற்றங்களை அமைப்புசார்ந்த முறையில் மேற்கொள்ளும் கும்பல்களை சேர்ந்தவர்கள்.

சில்வர்: சட்டவிரோத செயல்களில் ஈடுபடும் அல்லது குற்றப்பின்னணி கொண்ட சிறார்களை அடையாளம் கண்டு, பெற்றோர் மற்றும் பாதுகாவலர்கள் மூலம் அவர்களை நல்வழிப்படுத்தும் நடைமுறை.

மஞ்சள் மற்றும் பச்சை: குற்றவாளிகளின் முந்தைய குற்றப் பதிவுகள், அவர்கள் சமூகத்துக்கு ஏற்படுத்தக்கூடிய அச்சுறுத்தல், ஆபத்துகளின் மதிப்பீடு ஆகியவற்றின் அடிப்படையில் அவர்களின் அபாய நிலையை குறிக்கும் வண்ணங்களாக இந்த இரண்டும் பயன் படுத்தப்பட உள்ளன.

இந்த புதிய நடைமுறை மூலம் பெண்களுக்கு எதிரான குற்றங்களில் ஈடுபடுபவர்களை தொடர்ந்து கண்காணித்து, அவர்கள் மீண்டும் குற்றங்களில் ஈடுபடுவதைத் தடுக்க காவல் துறை திட்டமிட்டுள்ளது.

## நலத்திட்ட உதவி என ரேஷன் அரிசி வழங்கிய த.வெ.க., எம்.எல்.ஏ.! நடவடிக்கை எடுக்க நயினார் வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.01-

"நலத்திட்ட உதவி என்ற பெயரில் தரமற்ற ரேஷன் அரிசியை விநியோகித்த மதுரை தெற்கு தொகுதி தவெக எம்எல்ஏ எஸ்.ஆர். தங்கப்பாண்டி மீது நடவடிக்கை எடுக்க வேண்டும்" என தமிழக பாஜக தலைவர் நயினார் நாகேந்திரன் கோரிக்கை வைத்துள்ளார்.

இதுகுறித்து அவர் வெளியிட்ட எக்ஸ் பதிவில், "மதுரையில் முதல்வர் விஜய்யின் பிறந்தநாளை ஒட்டி, ஏழை மக்களுக்கான ரேஷன் அரிசியை முறைகேடாக நலத்திட்ட உதவியாக வழங்கியதாக மதுரை மேற்கு தொகுதி சட்டப்பேரவை உறுப்பினர் எஸ்.ஆர். தங்கப்பாண்டி மீது எழுந்துள்ள புகார் அதிர்ச்சியளிக்கிறது. அரசு வழங்கும் இலவச அரிசியை தங்களின் சொந்த உதவி போலக் காட்டி விளம்பரப்படுத்துவது வெட்கக்கேடான செயலாகும்.



விநியோகிக்கப்பட்ட பைகளில் துர்நாற்றம் வீசிய தரமற்ற ரேஷன் அரிசி இருந்ததால், அதிருப்தியடைந்த பொதுமக்கள் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் முறையிட்டுள்ளனர். இந்தப் புகாரின் அடிப்படையில், மதுரை மாவட்ட வருவாய் அலுவலர் அரிசியைப் பறிமுதல் செய்து ஆய்வகச் சோதனைக்கு அனுப்பி வைத்துள்ளார்.

எனவே, புகாரின் உண்மைத்தன்மையை ஆராய்ந்து, உரிய விசாரணை நடத்தி, புகார் உண்மையாக இருக்கும் பட்சத்தில், இத்தகைய விதிமீறலில் ஈடுபட்ட தவெகவினர் மீதும், அதற்கு உடந்தையாக இருந்தவர்கள் மீதும் காவல் துறை நடவடிக்கை எடுக்க வேண்டும் என வலியுறுத்திக் கேட்டுக்கொள்கிறேன்." எனத் தெரிவித்துள்ளார்.

## டெல்லி சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கப்பட்ட வெங்கட நாராயணனை நீக்க தி.மு.க., வலியுறுத்தல்

சென்னை, ஜூலை.01-

திமுக வர்த்தக அணி செயலாளர் காசி முத்து மாணிக்கம் வெளியிட்ட அறிக்கை: கன்னட பட தயாரிப்பாளர் வெங்கட நாராயணாவை தமிழக அரசின் டெல்லி சிறப்பு பிரதிநிதியாக நியமிக்கலாமா என்று கேட்டால், திருநாவுக்கரசரை மத்திய பிரதேசத்தில் இருந்து எம்பி ஆக்கவில்லையா என்கிறார் அமைச்சர் செங்கோட்டையன்.

நாடாளுமன்ற உறுப்பினராக இந்தியர் ஒருவர் இந்தியாவில் எங்கும் நிற்கலாம். சட்டப் பேரவைவைக்கு அந்த மாநிலத்துக்குள் வாக்காளராக இருக்க வேண்டும் என்பதும், கவுன்சிலருக்கு அந்த வார்டிலேயே வாக்காளராக இருக்க வேண்டும் என்பதும் கூடவா செங்கோட்டையனுக்கு தெரியாது.

டெல்லியில் தானே வேலை செய்வார் என்கிறார் அமைச்சர் நிர்மல் குமார். டெல்லியில் உள்ளவர்களுக்காக வேலை செய்யப் போகிறாரா? தமிழர்களுக்காகத் தானே பேசப்போகிறார்.

அப்படியென்றால், கோட்டையில் அறையும், தேசியக் கொடியும், காரும் அவருக்கு இல்லையா? இது சின்ன பதவி பெரிதுபடுத்த வேண்டாம் என்கிறார் அமைச்சர்.

இது சின்ன பதவி என்றால், அமைச்சர் அந்தஸ்து எதற்கு? அதிமுகவில் இருந்து தவெகவில் இணைந்த முன்னாள் அமைச்சர்களில் ஒருவரையோ, புதிய படித்த தமிழரையோ நியமிக்கலாம். வெங்கட நாராயணனை நீக்கலாம் என தெரிவித்துள்ளார்.

## அருணாச்சலப் பிரதேச நிலச்சரிவில் அடித்துச் செல்லப்பட்டவர் அதிசயமாக தப்பினார்

சிஜி, ஜூலை.01-

அருணாச்சலப் பிரதேசத்தில் ஏற்பட்ட நிலச்சரிவில் அடித்துச் செல்லப்பட்ட இருசக்கர வாகன ஓட்டி ஒருவர் அதிசயமாக உயிர் தப்பினார்.

அருணாச்சலப் பிரதேசத்தின் சியாங் மாவட்டத்தில் கடந்த சில நாட்களாக கன மழை பெய்து வருகிறது. இதனால் பல இடங்களில் வெள்ளப் பெருக்கு ஏற்பட்டு, ஆங்காங்கே நிலச்சரிவுகளும் ஏற்பட்டன.

இந்நிலையில் சிஜி என்ற இடத்தில் நேற்று முன்தினம் ஒருவர் தனது மோட்டார் சைக்கிளில் சேறு நிறைந்த சாலையில் பயணம் செய்து கொண்டிருந்தார்

அப்போது மழை நீரில் நன்கு ஊறியிருந்த சாலையின் நிலப் பகுதி திடீரென சரிந்து சிஜி ஆற்றில் விழுந்தது. இதனால் மோட்டார் சைக்கிளில் பயணம் செய்த நபர் மணல், பாறைகளுடன் அடித்துச் செல்லப்பட்டார். இதில் பைக் ஒரு புறமும், அதில் பயணம் செய்தவர் ஒரு புறமும் விழுந்தனர். ஆனால் அந்த நபர் மணலில் இருந்து எழுந்து ஓடி மேலே வந்தார். இந்த வீடியோ காட்சிகளை ஒருவர் எக்ஸ் தளத்தில் வெளியிட்டுள்ளார். அது வேகமாகப் பரவி வருகிறது. இந்த நிலச்சரிவில் இவர் தப்பியது அதிசயம் என பலர் கருத்து தெரிவித்துள்ளனர்.

## சிவகங்கை மாவட்ட திமுக மாணவரணி சார்பில் அமைச்சர் சரத்குமாரை கண்டித்து ஆர்ப்பாட்டம் செய்தனர். ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் கைது

### கதிர். ராஜ்குமார் தலைமையில் தென்னவன். தமிழரசி ரவிக்குமார். மாரியப்பன் கென்னடி. சேங்கைமாறன் . சுப. மதியரசன் . மேயர் குணசேகரன் . துரை ஆனந்த் பங்கேற்பு

சிவகங்கை ஜூலை.01

சிவகங்கையில் தமிழ்நாடு மனிதவள மேம்பாட்டுத்துறை அமைச்சர் சரத்குமார் போதைப்பொருள் பயன்படுத்தியதைத் தொடர்ந்து பொதுமக்களிடையே பெரும் கொந்தளிப்பை ஏற்படுத்தியது...

திமுக தலைமைக்கழகமானது மாணவரணி சார்பில் மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டத்தை நடத்திட அறிவுறுத்தியதையடுத்து தமிழ்நாடு முழுவதும் திமுக மாணவரணி சார்பில் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது...

அந்த வகையில் சிவகங்கை மாவட்டத்தில் மாவட்ட மாணவரணி சார்பில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் கதிர். இராஜ்குமார தலைமையில் சிவகங்கை நகர் அரண்மனை வாசல் பகுதியில் சுமார் ஆயிரத்திற்கும் மேற்பட்டோர் ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டனர்...



மாவட்ட மாணவரணி துணை அமைப்பாளர்களான வழக்கறிஞர் இராஜ அமுதன் . காரை ஜெபத்துரை . வழக்கறிஞர் ரம்யா மணிவண்ணன் ஆகியோரது முன்னிலையிலும் ஆர்ப்பாட்டமானது நடைபெற்றது...

முன்னாள் அமைச்சர்களான தென்னவன் . தமிழரசி ரவிக்குமார் . சட்டமன்ற முன்னாள் உறுப்பினர்களான சுப. மதியரசன் . மானாமதுரை சேர்மன் மாரியப்பன் கென்னடி . மாவட்ட துணைச் செயலாளர் சேர்மன் சேங்கைமாறன். மாநில கொள்கைபரப்பு துணைச்செயலாளர் முனைவர் தமிழ்ப்ரியா வேங்கை பிரபாகரன் . வணக்கத்திற்குரிய மேயர் நா. குணசேகரன் . சிவகங்கை சேர்மன் நகர செயலாளர் துரை ஆனந்த்

மாவட்ட திட்டக்குழு முன்னாள் உறுப்பினர் தேவகோட்டை நகரச் செயலாளர் பெரி. பாலமுருகன் அம்பலம். மாவட்ட செய்தித் தொடர்பாளர் கவுன்சிலர் அயூப்கான் , தலைமைப் பொதுக்குழு உறுப்பினர் மாமன்ற உறுப்பினர் தெய்வானை இளமாறன் . ஒன்றியக்கழக செயலாளர்களான ஆறு.



செல்வராசன் , கல்லல் நெடுஞ்செழியன் . சிவகங்கை முத்துராமலிங்கம். டாக்டர் ஜெயராமன் . நகரம் பொன்னுச்சாமி . குன்றக்குடி சுப்பிரமணி. தேவகோட்டை தெற்கு நாகனி ரவி. கண்டாங்கிபட்டி மந்தக்காளை, துரை. இராஜாமணி. வெங்கட்ராமன். யோக. கிருஷ்ணகுமார் .தமிழ்மாறன் . வழக்கறிஞர் அண்ணாதுரை. முத்துச்சாமி . ஆர். எம். கென்னடி. சின்னதுரை

. லெ. மு. ரவிச்சந்திரன் . சண்முகவடிவேல் . பேரூர் நாகூர் கனி. கார்த்திகேயன் . புதுவயல் அலிபாய் , துணைத்தலைவர்களான வழக்கறிஞர் கார்கண்ணன் . திருப்புவனம் ரஹமதுல்லாகான் , இளையான்குடி டி. கே.. இபுறாஹீம் , மானாமதுரை பாலசுந்தரம் ஆகியோரும் கலந்து கொண்டனர்.

மாவட்ட நிர்வாகிகளான இளைஞரணி . நாகனி செந்தில்குமார் , பவானி கணேசன் . ஹேமலதா செந்தில் , கே. எஸ். நாராயணன் . மீனாட்சி ரெடிமேட்ஸ் ரா. தனசேகரன் , அ. தனசேகரன் , வேங்கை பிரபாகரன் , ஆதி

அழகர்சாமி, பாஸ்கரன், துஷாந்த் பிரதீப் குமார் , பில்லூர் கார்த்திக் , பிரபாகர் , பேராசிரியர் எம்.சிங்கமுத்து . விவசாய அணி டி. ஆர். சேகர் , அச்சங்குளம் முருகன் , இடைக்காட்டூர் சண்முகநாதன் . ஜிம் மூர்த்தி . ருக்மா சரவணன் . ஏடிஎன்ஆர். ரவி , வண்டவாசி கோவிந்தன் , மார்கரேட் கமலா பத்தினாதன் இளைஞரணி மணலூர் கே. எம். பொற்கோ . பரணிகிட்டு . ஐடி விங் வாடிவாசல் செல்வம் . மெ. காளிமுத்து , முப்பையூர் சிவா . ஒய்க்கா சோமு. இளையான்குடி கி. கண்ணன் . மாநகர் துணைச் செயலாளர் லெட்சுமி ராஜ் கணேஷ் , தமறாக்கி ரவி . திருமலை குமணன் , பிரமனூர் அறிவுக்கரசு , வீணஸ் இராமநாதன் , முனைவர் இளங்கோவன் , ஏனாதி இராமலிங்கம் , வீரகாளை , ஆலங்குளம் ரவிச்சந்திரன் , துணைச் செயலாளர்களான வில்லூபட்டி பண்ணையார் இராமமூர்த்தி . ஒக்கூர் புதூர் செல்வம், மடப்புரம் மகேந்திரன் , , சோமன். சோழபுரம் மாரி. தேளி கோபால், கலுங்குபட்டி முருகன் , வழக்கறிஞர் பில்லூர் கார்த்தி . கவுன்சிலர் சண்முகப்ரியா . ஆறு. சரவணன் , லாடனேந்தல் சுப்பையா , சுப. ஜெயகாந்தன் . சோம. சதீஷ்குமார் , துபாய் காந்தி. இராமதாஸ் . கீதா கார்த்திகேயன் . தமறாக்கி அம்பலம் . தேவகோட்டை தெற்கு மாணவரணி செலுகை எஸ். சண்முகநாதன் . பொறியாளர் பாஸ்கரன் , இலக்கிய அணி , சுரேஷ்காந்த் , தேவாரம்பூர் இராமநாதன் , சொட்டதட்டி சக்திமுருகன் , காளையார்கோவில் ரமேஷ் என்ற சொக்கு . குட்டி சோமு , கவுன்சிலர் மதியழகன் , சமத்துவபுரம் சயயத்துரை , கண்ணாரிருப்பு ரவி . மாணவரணி கார்த்திக் , தினேஷ் , செம்புக்குட்டி , ராஜராஜன் , இளையராஜா. காரை கார்த்திக் , காரை அருள்தாஸ் , கவுன்சிலர் காரைக்குடி கார்த்திக் , பொன்னம்பலம்

, வாகுளத்துப்பட்டி சரவணன் , ஐடி விங் நெற்குப்பை முருகேசன், முனியராஜ், டாமின் குமார் , ஏழுமலைச்சாமி , மலம்பட்டி காளைமேகம் , ஆறுமுகம் , கவுன்சிலர் கண்ணன் , பாலகிருஷ்ணன், கணேஷ்பிரபு , பொன்னழகு , பெத்தானேந்தல் பாண்டி, . சிவானந்தா , ஐடி விங் கொட்டகுடி தேவேந்திரன் உள்ளிட்ட ஏராளமான திமுகவினர் கலந்து கொண்டனர்..

இதனிடையே கைதான திமுகவினரை தனியார் திருமண மண்டபத்தில் அடைக்கப்பட்டனர்...


present sale for all over Tamil Nadu

தற்பொழுது தமிழகமெங்கும் விற்பனையாகி வருகிறது



# உடல் உறுப்பு தானம் செய்யபட்டவருக்கு மாவட்ட வருவாய் அலுவலர் மலர் வளையம் வைத்து அஞ்சலி

உதகை, ஜூலை.1-

நீலகிரி மாவட்டம் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில், கூடலூர் சுங்கம் எஸ்.எஸ். நகர் பகுதியை சேர்ந்த ராதா என்பவரின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டதை தொடர்ந்து இறந்தவரின் உடலுக்கு அரசு மரியாதை செய்யும் விதமாக தமிழ்நாடு அரசின் சார்பில், மாவட்ட வருவாய் அலுவலர் நாராயணன் மலர் வளையம் வைத்து மரியாதை செலுத்தினார்.

நீலகிரி மாவட்டம் கூடலூர் சுங்கம் எஸ்.எஸ். நகர் பகுதியை சேர்ந்த அப்புண்ணி என்பவரின் மனைவி ராதா, அதிகளவிலான மூச்சுத் திணறல் காரணமாக கடந்த 27.06.2026 அன்று சிகிச்சைக்காக உதகை அரசு மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட நிலையில், அவர் அதிகாலை மூளைச்சாவு அடைந்தார். மேற்படி நபரின் உடல் உறுப்புகள் தானம் செய்யப்பட்டதை தொடர்ந்து, தமிழ்நாடு அரசின் சார்பில் உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனையில் வைக்கப்பட்டுள்ள ராதா அவர்களது உடலுக்கு மரியாதை செலுத்தப்பட்டது.

இந்நிகழ்வில், உதகை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை முதல்வர் மரு.ஸ்ரீனிவாசன், இருப்பிட மருத்துவ அலுவலர் மரு.ரவிசங்கர், உதவி இருப்பிட மருத்துவ அலுவலர்கள் மரு.வினோத்குமார், மரு.மணிகண்டன், மயக்கவியல் மருத்துவர் மரு.கார்திக், உதகை வருவாய் கோட்டாட்சியர் டினுஅரவிந்த், உதகை வட்டாட்சியர் சதீஷ் வரநாயக், மருத்துவர்கள், செவிலியர்கள் மற்றும் ராதா அவர்களின் உறவினர்கள் உட்பட பலர் கலந்து கொண்டனர்.

# தேனி பழனிசெட்டிபட்டியில் த.வெ.க அமைச்சரை கண்டித்து ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட முயன்ற தி.மு.க.வினர் கைது செய்தனர்




தேனி, ஜூலை.1-

தேனி திமுக வடக்கு மாவட்ட மாணவர் அணி சார்பில் த.வெ.க அமைச்சர் சரத்குமாரை கண்டித்து, அவரை பதவி நீக்கம் செய்ய வலியுறுத்தி கண்டன ஆர்ப்பாட்டம் தேனி பழனிசெட்டிபட்டி பகுதியில் நடைபெற்றது.

இந்த கண்டன ஆர்ப்பாட்டத்திற்காக பெரியகுளம் முன்னாள் எம்.எல்.ஏ., சரவணகுமார், மாவட்ட துணை செயலாளர் திருக்கண்ணன், ஒன்றிய செயலாளர் அய்யப்பன், போடி நகர செயலாளர் புருஷோத்தமன், பழனிசெட்டிபட்டி பேரூராட்சி தலைவர் மிதுன் சக்கரவர்த்தி, பழனிசெட்டிபட்டி பேரூர் திமுக செயலாளர் செல்வராஜ், பூதிப்புரம் பேரூராட்சி தலைவர் கவியரசு, வீரபாண்டி பேரூர் திமுக செயலாளர் செல்வராஜ் மற்றும் திமுக நிர்வாகிகள், திமுக மாணவரணியினர் த.வெ.க அமைச்சர் சரத்குமாரை கண்டித்து கண்டன கோஷங்கள் எழுப்பி கொண்டே ஊர்வலமாக வந்தனர்.



# சேலையூரில் தேசிய கேமரா தினம் 2026 முன்னிட்டு கேக் வெட்டி கொண்டாடிய புகைப்பட கலைஞர்கள்

சேலையூர் ஜூலை.1-

செங்கல்பட்டு மாவட்டம் தாமரை அடுத்த சேலையூரில் தேசிய கேமரா தினத்தை முன்னிட்டு 39.06.26 அன்று மாலை 6.00 மணியளவில் தமிழ்நாடு புகைப்பட கலைஞர்கள் சுய உதவி குழு (TPSHG) மற்றும் தாம்பரம் வீடியோ புகைப்படக் கலைஞர்கள் பெட்ரேஷன் (TVPF) சார்பில் சிறப்பு நிகழ்ச்சி நடத்தப்பட்டு கேக் வெட்டி கொண்டாடப்பட்டது.

புகைப்படக் கலை உலகின் வளர்ச்சி, தொழில்நுட்ப முன்னேற்றம் மற்றும் புகைப்படக் கலைஞர்களின் பங்களிப்பை நினைவுகூரும் வகையில் நடைபெற்ற இந்த நிகழ்ச்சியில் ஏராளமான புகைப்பட மற்றும் வீடியோ கலைஞர்கள் உற்சாகமாக பங்கேற்றனர்.

நிகழ்ச்சியில் தமிழ்நாடு புகைப்பட கலைஞர்கள் சுய உதவி குழுவின் (TPSHG) தலைவர் முனைவர் கோபி அவர்கள் தலைமையேற்று தேசிய கேமரா தினத்தின் முக்கியத்துவத்தை எடுத்துரைத்தார். தொடர்ந்து செயலாளர் எம். அர்ஜுன் அவர்கள் புகைப்படத் துறையின் வளர்ச்சி, இளம் தலைமுறையினருக்கான வாய்ப்புகள் மற்றும் தொழில்முறை முன்னேற்றம் குறித்து உரையாற்றினார்.

மேலும் தாம்பரம் வீடியோ புகைப்படக் கலைஞர்கள் பெட்ரேஷன் உறுப்பினர்களான சாய்பாலு, ஞானமூர்த்தி, ஜெயபாலன் உள்ளிட்டோர் கலந்து கொண்டு கேக் வெட்டி விழாவை சிறப்பித்தனர்.

நிகழ்வில் கலந்து கொண்டவர்கள் அனைவரும் புகைப்படக் கலை என்பது நினைவுகளை நிலைநிறுத்தும் ஒரு சமூகப் பொறுப்பு மிக்க துறை என்றும், புதிய தொழில்நுட்பங்களை கற்று கொண்டு இத்துறையை மேலும் வளர்த்தெடுக்க அனைவரும் இணைந்து செயல்பட வேண்டும் என்றும் கருத்து தெரிவித்தனர்.

இறுதியாக கலந்து கொண்ட உறுப்பினர்கள் ஒருவருக்கொருவர் வாழ்த்துகளை பரிமாறி தேசிய கேமரா தினத்தை உற்சாகமாக கொண்டாடினர்.

# இளையான்குடி அரசு மருத்துவமனையை இடமாற்றம் செய்யக் கூடாது: நகர் கழகச் செயலாளர் நாகூர் மீரா கோரிக்கை

இளையான்குடி, ஜூலை.1-

சிவகங்கை மாவட்டம் இளையான்குடி பேரூராட்சியின் மையப்பகுதியில் தற்பொழுது பழைய பேருந்து நிலையம் அருகில் இயங்கி வரும் அரசு பொது மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றம் செய்யும் முடிவை கைவிட வேண்டும் என்று இளையான்குடி அதிமுக 17வது வார்டு கவுன்சிலரும், நகர் கழகச் செயலாளருமான M.A.நாகூர் மீரா வலியுறுத்தியுள்ளார். இது தொடர்பாக மருத்துவம் மற்றும் கிராமப்புற சுகாதார சேவைகள் இணை இயக்குநருக்கு அவர் கோரிக்கை மனு ஒன்றை அனுப்பியுள்ளார்.

அந்த மனுவில் அவர் குறிப்பிட்டுள்ளதாவது:

தீர்மானத்திற்கு எதிர்ப்பு: இளையான்குடி அரசு பொது மருத்துவமனையை நகரின் மையப்பகுதியிலிருந்து சுமார் 5 கிலோ மீட்டர் தொலைவில் உள்ள வேறு இடத்திற்கு மாற்றம் செய்யக் கோரி, கடந்த 13.10.2025 அன்று பேரூராட்சியில் தீர்மானம் நிறைவேற்றப்பட்டது. 17 வது வார்டு கவுன்சிலர் என்ற முறையில் பொதுமக்கள் நலன் கருதி இந்த தீர்மானத்தை நான் கடுமையாக எதிர்த்துள்ளேன்.

பொதுமக்களுக்கு ஏற்படும் சிரமங்கள்: தற்பொழுது இயங்கி வரும் மருத்துவமனை, இளையான்குடி பேரூராட்சியின் 18 வார்டுகளில் வாழும் சுமார் முப்பதாயிரம் மக்களுக்கும் மற்றும் சுற்றுவட்டார கிராம மக்களுக்கும் எளிதில் வந்து செல்லக்கூடிய வகையில் வசதியாக உள்ளது. மருத்துவமனையை 5 கிலோ மீட்டர் தொலைவிற்கு மாற்றினால், இரவு நேரங்களில் அவசர சிகிச்சைக்காக வரும் நோயாளிகளுக்கு எவ்வித போக்குவரத்து வசதியும் இருக்காது. இதனால் ஏழை எளிய பொதுமக்களும், மருத்துவப் பயணாளிகளும் மிகுந்த சிரமத்திற்கு உள்ளாவார்கள்.

போதிய இடவசதி உள்ளது: தற்பொழுது மருத்துவமனை இயங்கி வரும் பகுதியில் GRS No.12/13இல் 89 செண்ட் மற்றும் சர்வே எண் 12/327இல் 22 செண்ட் என மொத்தம் 1 ஏக்கர் 11 செண்ட் நிலம் உள்ளது. மருத்துவமனையை நவீன வசதிகளுடன் விரிவாக்கம் செய்வதற்கு இந்த இடமே போதுமானதாகும். எனவே, பொதுமக்களின் அவசரத் தேவைகளையும் நலனையும் கருத்தில் கொண்டு, மருத்துவமனையை வேறு இடத்திற்கு மாற்றும் முடிவைக் கைவிட்டு, தற்பொழுது இருக்கும் இடத்திலேயே அடுக்கமாடி கட்டிடம் கட்டி நவீன வசதிகளுடன் விரிவாக்கம் செய்து தர வேண்டும் என்று அவர் அந்த மனுவில் கேட்டுக்கொண்டுள்ளார்.

இம்மனுவின் நகல்கள் சிவகங்கை மாவட்ட ஆட்சியர், மாவட்ட வருவாய் அலுவலர், வருவாய் கோட்ட அலுவலர் மற்றும் இளையான்குடி வட்டாட்சியர் ஆகியோருக்கும் உரிய நடவடிக்கைக்காக அனுப்பப்பட்டுள்ளன.




## ஸ்ரீபெரும்புதூர் அருகே சவீதா மருத்துவமனை சாதனை

# இறுதிக்கட்ட கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்ட இருவருக்கு மறுவாழ்வு!

ஸ்ரீபெரும்புதூர், ஜூலை.1-

காஞ்சிபுரம் மாவட்டம் ஸ்ரீபெரும்புதூர் அடுத்த தண்டலம் அருகே உள்ள சவீதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனை மருத்துவர்கள், இறுதிக்கட்ட கல்லீரல் நோயால் பாதிக்கப்பட்ட இருவருக்கு ஒரே நேரத்தில் கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை செய்து சாதனை படைத்துள்ளனர். மூளைச்சாவு அடைந்தவர்களின் உறுப்புதானம் மூலம் இந்த இரு உயிர்களும் காக்கப்பட்டுள்ளன.

சென்னையைச் சேர்ந்த 67 வயதான விஸ்வபாரதி மற்றும் கொல்கத்தாவைச் சேர்ந்த 37 வயதான அமித் சாஹா ஆகியோர், 'போர்டல் ஹைப்பர்டென்ஷன்' (Portal Hypertension) எனப்படும் இறுதிக்கட்ட நாள்பட்ட கல்லீரல் நோயால் கடுமையாக பாதிக்கப்பட்டு அவதியுற்று வந்தனர். இருவரும் உயர்தர சிகிச்சைக்காக ஸ்ரீபெரும்புதூர் தண்டலம் பகுதியில் உள்ள சவீதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்டனர். இவர்களைப் பரிசோதித்த மருத்துவக் குழுவினர், கல்லீரல் மாற்று அறுவை சிகிச்சை மட்டுமே இவர்களின் உயிரைக் காக்கக்கூடிய ஒரே நிரந்தரத் தீர்வு என்று அறிவுறுத்தினர் இந்த நிலையில், சமீபத்தில் நிகழ்ந்த சாலை விபத்தில் மூளைச்சாவு அடைந்த இரு நபர்களின் குடும்பத்தினர், தங்களின் சோகத்திலும் உயரிய மனிதநேயத்தோடு உடல் உறுப்புகளைத் தானம் செய்ய முன்வந்தனர். இதனையடுத்து, சவீதா மருத்துவமனையின் கல்லீரல் பிரிவு அறுவை சிகிச்சை நிபுணர் மருத்துவர் நிர்மல் தலைமையிலான மருத்துவக் குழுவினர் களமிறங்கினர் சுமார் 10 மணி நேரம் மிகவும் சிக்கலான முறையில் நடைபெற்ற இந்த மாற்று அறுவை சிகிச்சையின் மூலம், இரு நோயாளிகளுக்கும் புதிய கல்லீரல் வெற்றிகரமாக பொருத்தப்பட்டது. தற்பொழுது தீவிர கண்காணிப்பிற்குப் பிறகு, நோயாளிகள் இருவரும் பூரண குணமடைந்து, நலமுடன் இருப்பதாக சவீதா மருத்துவமனை மருத்துவர்கள் மகிழ்ச்சி தெரிவித்துள்ளனர் துயரமான சூழலிலும் உறுப்புதானம் செய்ய முன்வந்த அந்த இரு குடும்பத்தினரின் உயரிய மனிதநேயச் செயல் போற்றத்தக்கது. அதேபோல், 10 மணி நேரம் போராடி உயிர்காக்கும் இந்த சிக்கலான சிகிச்சையை வெற்றிகரமாக நிறைவேற்றிய மருத்துவர் நிர்மல் தலைமையிலான மருத்துவக் குழுவினரின் அர்ப்பணிப்பும் பாராட்டுக்குரியது."

செய்திப் பின்னணி (Sign-off): தண்டலம் சவீதா மருத்துவக் கல்லூரி மருத்துவமனையின் நவீன மருத்துவ வசதிகள் மற்றும் மருத்துவர்களின் அசுர முயற்சியால், இறப்பின் விளிம்பில் இருந்த இரு நபர்கள் மறுவாழ்வு பெற்று வீடு திரும்பியிருப்பது பொதுமக்களிடையே நெகிழ்ச்சியையும், உறுப்புதானத்தின் முக்கியத்துவத்தையும் உணர்த்தியுள்ளது.



# விஜய் பிறந்தநாள் விழா அரிசி சர்ச்சைக்கு முற்றுப்புள்ளி

## வழங்கப்பட்டது ரேஷன் அரிசி அல்ல அதிகாரிகள் ஆய்வில் உறுதி

மதுரை, ஜூலை.1-

தமிழக முதல்வர் விஜயின் 52வது பிறந்தநாளை முன்னிட்டு மதுரை விளாங்குடி 1வது வார்டில் நடைபெற்ற நலத்திட்ட உதவி வழங்கும் விழாவில் வழங்கப்பட்ட அரிசி தொடர்பாக எழுந்த சர்ச்சைக்கு அதிகாரிகள் நடத்திய ஆய்வில் முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது. விழாவில் வழங்கப்பட்ட அரிசி பொது விநியோகத் திட்ட (ரேஷன்) அரிசி அல்ல என்பது அதிகாரப்பூர்வமாக உறுதி செய்யப்பட்டுள்ளது.

சமூக ஆர்வலர் பி. சிவாஜி, கடந்த ஜூன் 24ஆம் தேதி நடைபெற்ற விழாவில் 1,000 பேருக்கு தலா 5 கிலோ வீதம் மொத்தம் 5 டன் ரேஷன் அரிசி வழங்கப்பட்டதாகவும், ஏழை மக்களுக்கான பொது விநியோகத் திட்ட அரிசியை பயன்படுத்தி முதல்வரின் நற்பெயருக்கு களங்கம் ஏற்படுத்தும் முயற்சி நடைபெறுவதாகவும் மாவட்ட ஆட்சியரிடம் புகார் மனு அளித்திருந்தார்.

இந்த குற்றச்சாட்டை மறுத்து, விழாவில் அரிசி பெற்ற பயனாளிகள், தங்களுக்கு வழங்கப்பட்டது தரமான நாட்டுப் பொன்னி அரிசி என்றும், அதையே தற்போது வீட்டில் பயன்படுத்தி வருவதாகவும் தெரிவித்தனர். தரமற்ற அல்லது ரேஷன் அரிசி வழங்கப்பட்டதாக கூறப்படுவது உண்மைக்கு புறம்பானது என்றும் அவர்கள் விளக்கம் அளித்தனர். இதையடுத்து, மதுரை மாவட்ட வட்ட வழங்கல் அலுவலர் ராஜகுரு, தமிழ்நாடு நுகர்பொருள் வாணிபக் கழக முதுநிலை மேலாளர் சுகி பிரேமலதா மற்றும் கூட்டுறவு சங்கங்களின் இணைப்பதிவாளர் ஹேமா சலோனி ஆகியோர் அடங்கிய அதிகாரிகள் குழு நேரில் ஆய்வு மேற்கொண்டது.

ஆய்வின் முடிவில், விழாவில் வழங்கப்பட்ட அரிசி பொது விநியோகத் திட்ட ரேஷன் அரிசி அல்ல என்பது உறுதி செய்யப்பட்டது. மேலும், அரிசி மாதிரிகள் ஆய்வக பரிசோதனைக்கு அனுப்பப்பட்டு அதன் முடிவுகளும் பெறப்பட்டுள்ளதாக மாவட்ட வழங்கல் துறை தெரிவித்துள்ளது. இதன் மூலம் கடந்த சில நாட்களாக பரபரப்பை ஏற்படுத்திய அரிசி சர்ச்சைக்கு அதிகாரப்பூர்வமாக முற்றுப்புள்ளி வைக்கப்பட்டுள்ளது.

# 10 ஆண்டுகளாக சீரமைக்கப்படாத சாலை: போராட்ட எச்சரிக்கையால் பரபரப்பு; அதிகாரிகள் பேச்சுவார்த்தையால் பஸ் மறியல் கைவிடப்பட்டது

புதுக்கோட்டை, ஜூலை.1-

புதுக்கோட்டை மாவட்டம் ஆவுடையார்கோவில் தாலுகாவிற்கு உட்பட்ட கிழக்கு கடற்கரைச் சாலையில், சேமங்கோட்டை விளக்கில் இருந்து பாதரக்குடி வரை உள்ள சாலை கடந்த 10 ஆண்டுகளுக்கும் மேலாக மிகவும் சேதமடைந்த நிலையில் இருப்பதாக பொதுமக்கள் குற்றம்சாட்டினர். சாலையை சீரமைக்கக் கோரி பலமுறை சம்பந்தப்பட்ட அதிகாரிகளிடம் மனு அளித்தும் இதுவரை எந்த நடவடிக்கையும் எடுக்கப்படவில்லை எனக் கூறிய பொதுமக்கள், தங்களது கோரிக்கையை வலியுறுத்தும் வகையில் கிழக்கு கடற்கரைச் சாலையில் பஸ் மறியல் போராட்டத்தில் ஈடுபடத் திட்டமிட்டனர்.



இதுகுறித்து தகவல் கிடைத்ததைத் தொடர்ந்து, தமிழக வெற்றி கழகத்தின் கிழக்கு ஒன்றிய செயலாளர் முகமது காரிஸ் சம்பவ இடத்திற்கு விரைந்து சென்று பொதுமக்களுடன் பேச்சுவார்த்தை நடத்தினார். அப்போது, அவர்களின் கோரிக்கைகள் தொடர்பாக உரிய நடவடிக்கை எடுக்கப்படும் என உறுதியளித்தார்.

மேலும், மாவட்ட துணை காவல் கண்காணிப்பாளர் வெங்கடேசன் சம்பவ இடத்திற்கு வந்து சம்பந்தப்பட்ட அதிகாரிகளை தொடர்புகொண்டு, பொதுமக்களின் பிரச்சினைக்கு உடனடி தீர்வு காண நடவடிக்கை எடுக்குமாறு கேட்டுக்கொண்டார்.

இதையடுத்து, அதிகாரிகளின் உறுதிமொழியை ஏற்று பொதுமக்கள் பஸ் மறியல் போராட்டத்தை கைவிட்டனர்.

அதேநேரத்தில், புதிதாக பொறுப்பேற்றுள்ள அரசு தங்களது நீண்டநாள் கோரிக்கையை விரைவாக நிறைவேற்ற வேண்டும் என்றும், இல்லையெனில் பாதிக்கப்பட்ட கிராம மக்களை ஒன்றிணைத்து மிகப்பெரிய போராட்டம் நடத்தப்படும் என்றும் பொதுமக்கள் எச்சரிக்கை விடுத்தனர்.



■ திருப்பூர் மாநகராட்சி துணை மேயர் மற்றும் மேயர் (பொ) ரா.பாலசுப்பிரமணியம் தலைமையில் மைய அலுவலகம், மாமன்ற கூட்டரங்கில், மாமன்ற கூட்டம் நடைபெற்றது. உடன் மாநகராட்சி ஆணையாளர் எம்.பி.அமித் மண்டலத் தலைவர்கள், மாமன்ற உறுப்பினர்கள் ஆகியோர் கலந்து கொண்டனர்.



■ தேனி மாவட்ட ஆட்சியர் அலுவலகக் கூட்டரங்கில்நடைபெற்ற மக்கள் குறைதீர்க்கும் நாள் கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து 403 கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் .ப.ராஜகுமார் பெற்றுக்கொண்டார். இக்கூட்டத்தில் முதியோர் உதவித்தொகை, புதிய வீட்டுமனைப் பட்டா, வேலைவாய்ப்பு மற்றும் இதர மனுக்கள் என மொத்தம் 403 கோரிக்கை மனுக்களை பெற்றுக்கொண்ட மாவட்ட வருவாய் அலுவலர் அவர்கள், பொதுமக்களின் கோரிக்கை மனுக்களை சம்பந்தப்பட்ட துறை அலுவலர்களிடம் வழங்கி மனுக்கள் மீது குறித்த காலத்திற்குள் விரைந்து நடவடிக்கை மேற்கொள்ளுமாறு உத்தரவிட்டார்.இக்கூட்டத்தில் மாவட்ட ஆட்சியரின் நேர்முக உதவியாளர் (பொது) .ராமகிருஷ்ணன், தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி.) கவிதா, மாவட்ட வழங்கல் அலுவலர் .நல்லையா, மாவட்ட மாற்றுத்திறனாளிகள் நல அலுவலர் கமலராஜன் உட்பட அரசு அலுவலர்கள் பலர் கலந்து கொண்டனர்.

# உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக ஆசிரியர்கள் மாணவர்களுக்கு பாராட்டு விழா

சிவகங்கை. ஜூலை.1-

2025 2026 ஆம் கல்வியாண்டில் பத்தாம் வகுப்பு மற்றும் பன்னிரெண்டாம் வகுப்பு அரசுப் பொதுத்தேர்வில் சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்டங்களில் நூறு சதவீத தேர்ச்சி பெற்ற தேர்ந்தெடுக்கப்பட்ட பள்ளிகளுக்கும், பாட ஆசிரியர்களுக்கும் உலக திருக்குறள் கூட்டமைப்பு சார்பாக பாராட்டு விழா காரைக்குடி கண்ணதாசன் மணிமண்டபத்தில் நடைபெற்றது.

இயற்கை மற்றும் கனிமவளத் துறை அமைச்சர் டி.கே. பிரபு சிறப்பு விருந்தினராக கலந்து கொண்டு பாராட்டுச் சான்றிதழையும், பதக்கம் அணிவித்து நினைவுப் பரிசையும் வழங்கி ஆசிரியர்களையும், மாணவர்களையும் கௌரவித்தார்.

ஆசிரியர் பணியிலும், சமூகப் பணியிலும் சிறப்பாக பங்களிப்பை செய்தவர்கள் தேர்ந்தெடுக்கப்பட்டு அவர்களுக்கு விருது வழங்கப்பட்டது.





உலக திருக்குறள் கூட்டமைப்பின் தலைவர் முனைவர் ஞானமூர்த்தி தலைமை உரையாற்றினார். பொதுச் செயலாளர் பேராசிரியர் தங்க ஆதிலிங்கம் கூட்டமைப்பின் நோக்கவுரையாற்றினார். முனைவர் சுவேதா சீவானந்தம் அறிமுக உரையாற்றினார். துணைப் பொதுச் செயலாளர் குறள் செல்வி பிச்சி ஆதிலிங்கம், அமைப்புச் செயலாளர் திருமூர்த்தி வாழ்த்துரை வழங்கினர். விழா ஒருங்கிணைப்பாளர் மாநிலத் துணைப் பொதுச் செயலாளர் நல்லாசிரியர் வனிதா வரவேற்புரையாற்றினார். தமிழ் செம்மல் மெய்யாண்டவர் நன்றியுரை ஆற்றினார். முன்னதாக நாட்டியப் பள்ளி மாணவிகளின் வரவேற்பு நடனம் நடைபெற்றது. மாநில ஒருங்கிணைப்பாளர் தமிழரிமா சம்பத், சிவகங்கை, புதுக்கோட்டை மற்றும் இராமநாதபுரம் மாவட்ட பொறுப்பாளர்கள் லட்சுமி ஏமலதா சத்தியமூர்த்தி தமயந்தி சரவண ராசு மருது கண்ணன் கிருட்டினவேணி ரமேசு பாபு சசிமா இளங்கோவன் ரேவதி பால்துரை இளங்கோவடிகள் மேகலா கார்த்திக் கண்ணன் முத்துலெட்சுமி சகுந்தலா தேவி ஆகியோர் விழாவிற்கான ஏற்பாடுகளை செய்தனர். மாவட்டத் தலைவர் மாலா, மாவட்ட செயலாளர் ஜோதி சுந்தரேசன் பரிசளிப்பு நிகழ்ச்சியை தொகுத்தளித்தனர். மாவட்டத் துணைத் தலைவர் மகா பிரபு நிகழ்ச்சியை ஒருங்கிணைத்தார். இதனைத் தொடர்ந்து உலக திருக்குறள் கூட்டமைப்பின் மண்டல செயல் கூட்டம் நடைபெற்றது.

# கண் பரிசோதனை முகாம்

குன்னூர், ஜூலை.1-

தமிழக வெற்றிக் கழகத்தின் தலைவர் தமிழக முதல்வர் நல்லாசியுடன் அகில இந்திய பொதுச்செயலாளர் புஸ்ஸி ஆனந்த் உத்தரவின்படிநீலகிரி மாவட்ட பொறுப்பாளர் ரமேஷ் மற்றும் செயலாளர் பாமா ரமேஷ் அவர்களின் ஆணைப்படிகுன்னூர் நகர செயலாளர் பிரகாஷ் (மேற்கு )தலைமையில் கண் பரிசோதனை முகாம் (State Bank) அருகில் தொண்டரணி அமைப்பாளர் ஹபீப் மற்றும் நிர்வாகிகள் மூலமாக இலவசமாக நடைபெற்றது இதில் 57 கண்ணாடிகள் இலவசமாக வழங்கப்பட்டது தொண்டரணி அமைப்பாளர் ஹபீப்தொண்டரணி நிர்வாகிகள் தௌபீக், தப்ரிஸ், நிக்ஷான்த், ரியாஸ் முபாரக் சமூக ஆர்வலர் ஆகியோர் கலந்து கொண்டனர்



# உலக இரத்தக் கொடையாளர்கள் தினம்: சிவகங்கையில் மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி!

சிவகங்கை, ஜூலை.1-

சிவகங்கையில் உலக இரத்தக் கொடையாளர்கள் தினத்தை (ஜூன் 14) முன்னிட்டு, சிவகங்கை அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை இரத்த மையம் சார்பாக இன்று மாபெரும் விழிப்புணர்வுப் பேரணி நடைபெற்றது.

சிவகங்கை இணை இயக்குனர் அலுவலகத்தில் இருந்து தொடங்கிய இப்பேரணியை, மருத்துவக்கல்லூரி முதல்வர் மருத்துவர் செல்வராஜன் கொடியசைத்துத் துவக்கி வைத்தார். அங்கிருந்து புறப்பட்ட பேரணி, அரசு மருத்துவக்கல்லூரி மருத்துவமனை வரை சென்றடைந்தது. இப்பேரணியில், மருத்துவக் கண்காணிப்பாளர் மருத்துவர் தமிழ்வானன், நிலைய மருத்துவ அலுவலர் மருத்துவர் ரபீக், உதவி நிலைய மருத்துவ அலுவலர்கள் மருத்துவர் வெங்கடேஷ் மற்றும் மருத்துவர் தென்றல் ஆகியோர் முன்னிலை வகித்தனர். மேலும், துறைத்தலைவர் பேராசிரியர் மருத்துவர் சர்மிளா திலகவதி, இணைப் பேராசிரியர் விஜயலட்சுமி, இரத்த மைய அலுவலர்கள் மருத்துவர் சித்து ஹரி மற்றும் மருத்துவர் முஜப்பர் கான் ஆகியோர் கலந்து கொண்டனர்.

இவர்களுடன் செவிலியர் கண்காணிப்பாளர், மாவட்ட மேற்பார்வையாளர் வாருணிதேவி மற்றும் ஆய்வக நுட்புனர்களும் இதில் பங்கேற்றனர். மாணவர்களின் விழிப்புணர்வு முழக்கம்:இப்பேரணியில் 114 மருத்துவ மாணவர்கள் மற்றும் ஆய்வக நுட்புனர் மாணவர்கள் கலந்துகொண்டு, இரத்தக் கொடையின் முக்கியத்துவத்தை வலியுறுத்தும் விழிப்புணர்வு முழக்கங்களை எழுப்பினர்.

பேரணியின் நிறைவாக, இரத்தக் கொடை குறித்த விழிப்புணர்வு உறுதிமொழியைப் பங்கேற்பாளர்கள் அனைவரும் ஏகமனதாக ஏற்றுக் கொண்டனர். இப்பேரணி பொதுமக்களிடையே இரத்தக் கொடை குறித்த பெரும் விழிப்புணர்வை ஏற்படுத்தியது.



# தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து

தேனி, ஜூலை.1-

தேனி மாவட்ட காவல்துறையினர். பாதுமக்களின் பாதுகாப்பை உறுதி செய்யவும், குற்றச் செயல்களைத் தடுக்கும் நோக்கிலும், தேனி மாவட்ட காவல் கண்காணிப்பாளர் .K.S.பிரவீன் கௌதம், உத்தரவின் பேரில், தேனி மாவட்ட காவல்துறையினர் இரவு நேரங்களில் தீவிர நடை ரோந்து (Foot Patrolling) பணியில் ஈடுபட்டு வருகின்றனர்.மக்கள் அதிகம் கூடும் இடங்கள், வணிக வளாகங்கள், பேருந்து நிலையங்கள், குடியிருப்பு பகுதிகள் மற்றும் முக்கிய சாலைகளில் காவல்துறையினர் தொடர்ந்து கண்காணிப்பு மேற்கொண்டு வருகின்றனர். இந்த நடை ரோந்து பணியின் மூலம் திருட்டு, வழிப்பறி, சமூக விரோத செயல்கள் உள்ளிட்ட குற்றங்களை முன்கூட்டியே தடுத்து, சட்டம் மற்றும் ஒழுங்கை பராமரிப்பதற்கான நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

# ஊத்துக்கோட்டை பேரூராட்சி எட்டிகுளம் பகுதியில் குடிதண்ணீர் தட்டுபாடு நடவடிக்கை எடுக்க கோரி சமூக ஆர்வலர் கோரிக்கை

திருவள்ளூர், ஜூலை.1-

திருவள்ளூர் மாவட்டம் ஊத்துக்கோட்டை பேரூராட்சி 9வது வார்டு எட்டிகுளம் பகுதியில் காலை 7:00 மணிக்கே குடி தண்ணீர் விநியோகம் குழாயில் பல நாட்களாக நிறுத்தப்படுவதாக கூறப்படுகிறது இதுகுறித்து அப்பகுதி சமூக ஆர்வலர் பேரூராட்சி நிர்வாகத்திடம் கேட்ட போது சரியான மின்சாரம் இல்லாததால் சீரான தண்ணீர் உங்கள் பகுதிக்கு வினியோகம் செய்ய இயலவில்லை என மேற்கோள் காட்டப்படுவதாக



சொல்லப்படுகிறதுஎனவே அப்பகுதி வார்டு கவுன்சிலர் மற்றும் பேரூராட்சி நிர்வாகம் மின்சாரத் துறை அதிகாரிகள் அப்பகுதி மக்களின் குடி தண்ணீர் தட்டுபாட்டை போக்குவார்களா என அப்பகுதி சமூக ஆர்வலர் அப்புன் (எ) ஜெயக்குமாரின் கோரிக்கையாக இருந்துவருக்கிறது அதிகாரிகள் நடவடிக்கை எடுக்கவில்லை என்றால் அப்பகுதியில் உள்ள மக்களோடு இணைந்து காலி தண்ணீர் குடங்களுடன் சாலை மறியலில் ஈடுபட உள்ளதாகவும் கூறப்படுகிறது அப்பகுதி மக்களின் தண்ணீர் தட்டுப்பாட்டை போக்க. நீண்ட நாள் கோரிக்கையை ஏற்று சம்பந்தப்பட்ட. துறை சார்ந்த அதிகாரிகள் நடவடிக்கை எடுப்பார்களா? ????

# இடஒதுக்கீட்டு தீர்ப்பை எதிர்த்து தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் ஆர்ப்பாட்டம்: "தமிழக அரசு உடனே மேல்முறையீடு செய்ய வேண்டும்" வலியுறுத்தல்

மதுரை, ஜூலை.1-

இஸ்லாமிய மதத்திற்கு மாறுபவர்கள் பிற்படுத்தப்பட்ட வகுப்பு முஸ்லிம்களுக்கான (பிசிவி) இடஒதுக்கீட்டுச் சலுகையை கோர முடியாது என்ற சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வின் தீர்ப்பை கண்டித்து, தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் சார்பில் மதுரை கிரைம் பிரான்ச் அலுவலகம் அருகே செவ்வாய்க்கிழமை மாபெரும் கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

ஆர்ப்பாட்டத்திற்கு மாவட்டத் தலைவர் ஜாஹிர் உசேன் தலைமை தாங்கினார். மாநிலத் தலைவர் அப்துல் கரீம் சிறப்புரையாற்றினார். இதில் மாவட்ட நிர்வாகிகள் மற்றும் ஆயிரக்கணக்கான ஆண்கள், பெண்கள் கலந்து கொண்டு தீர்ப்புக்கு எதிராக முழக்கங்கள் எழுப்பி





தங்களது எதிர்ப்பை பதிவு செய்தனர்.

ஆர்ப்பாட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானத்தில், கடந்த 2024ம் ஆண்டு தமிழக அரசு வெளியிட்ட அரசாணையை சென்னை உயர்நீதிமன்ற மதுரை அமர்வு ரத்து செய்திருப்பது இஸ்லாமியர்களின் நீண்டகால இடஒதுக்கீட்டு உரிமையை பாதிக்கும் நடவடிக்கையாக உள்ளதாகக் கூறப்பட்டது.

மேலும், இடஒதுக்கீடு என்பது சாதி உயர்வுநீ தாழ்வை நிலைநிறுத்தும் திட்டம் அல்ல; சமூக மற்றும் கல்வி ரீதியாக பின்தங்கிய மக்களின் முன்னேற்றத்திற்காக அரசியலமைப்புச் சட்டம் வழங்கியுள்ள சமூகநீதிசார் உரிமை என்றும், அந்த உரிமையை பாதிக்கும் வகையில் வழங்கப்பட்டுள்ள தீர்ப்பை தமிழக அரசு உடனடியாக எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும் வலியுறுத்தப்பட்டது.

அதேபோல், இந்த வழக்கை அரசு உரிய முறையில் கையாளத் தவறியதால் இஸ்லாமியர்களின் இடஒதுக்கீட்டு உரிமை பாதிக்கப்பட்டுள்ளதாக எழுந்துள்ள குற்றச்சாட்டை நீக்கும் வகையில், உயர்நீதிமன்றத் தீர்ப்பை எதிர்த்து மேல்முறையீடு செய்ய வேண்டும் என்றும் தமிழ்நாடு தவ்ஹீத் ஜமாஅத் கோரிக்கை விடுத்தது.

மேலும், நீதிபதி ஜி.ஆர். சுவாமிநாதனிடம் மதம் தொடர்பான வழக்குகள் தொடர்ந்து ஒதுக்கப்படுவது குறித்து சென்னை உயர்நீதிமன்ற தலைமை நீதிபதி மறு பரிசீலனை மேற்கொள்ள வேண்டும் என்றும் ஆர்ப்பாட்டத்தில் வலியுறுத்தப்பட்டது.



■ திருப்பத்தூர் மாவட்ட ஆட்சியர் அலுவலக கூட்டரங்கில் நடைபெற்ற மக்கள் குறைதீர்வு கூட்டத்தில் பொதுமக்களிடமிருந்து பல்வேறு கோரிக்கை மனுக்களை மாவட்ட வருவாய் அலுவலர் ஜெ.நாராயணன் (29.06.2026) அன்று பெற்றுக்கொண்டார். உடன் தனித்துணை ஆட்சியர் (ச.பா.தி) பூஷணகுமார், மாவட்ட ஆட்சியரின் கூடுதல் நேர்முக உதவியாளர் (நிலம்) முருகேசன், மாவட்ட வழங்கல் அலுவலர் சீனிவாசன், அனைத்துத்துறை அரசு அலுவலர்கள் மற்றும் பல்வேறு துறை சார்ந்த அலுவலர்கள் உள்ளனர்.



■ தமிழக முதல்வர் ஜோசப் விஜயின் 52வது பிறந்த நாளை முன்னிட்டு, மதுரை அண்ணாநகர் பகுதியில் மாபெரும் அன்னதான நிகழ்ச்சி நடைபெற்றது.அண்ணாநகர் 37வது வட்டச் செயலாளர் ஜி. சுரேஷ் மற்றும் துணை வட்டச் செயலாளர் பிரவீன் ஆகியோர் தலைமையில் நடைபெற்ற இந்நிகழ்ச்சியில் சுமார் 500 பேருக்கு அன்னதானம் வழங்கப்பட்டது.பொதுமக்கள் திரளாக பங்கேற்று அன்னதானம் பெற்றனர். நிகழ்ச்சிக்கான ஏற்பாடுகளை நிர்வாகிகள் சிறப்பாக செய்திருந்தனர். முதல்வரின் பிறந்த நாளை முன்னிட்டு நடைபெற்ற இந்த சமூகநலப் பணியை பொதுமக்கள் பாராட்டினர்.

# நீலகிரி மாவட்டம்கூடலூரில்புற்றுநோய் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து

கூடலூர், ஜூலை.1-

கூடலூர் நகர சுகாதார நிலையத்தில், புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கும் நிகழ்ச்சி நடைபெற்றது. ஆல் தி சில்ரன் அமைப்பு சார்பில் நடைபெற்ற இந்நிகழ்ச்சிக்கு, மாவட்ட ஒருங்கிணைப்பாளர் அஜித் தலைமை தாங்கினார்.

கூடலூர் காசநோய் பிரிவு மேற்பார்வையாளர் விஜயகுமார், அரசு வட்டார சுகாதார நிலைய பாலியட்டிவ் பிரிவு செவிலியர் நிஷாந்தினி, செவிலியர் மேற்பார்வையாளர் செல்வி ஆகியோர் முன்னிலை வகித்தனர்.







கூடலூர் நகர சுகாதார நிலைய மருத்துவ அலுவலர் டாக்டர் கௌதம் மற்றும் கூடலூர் நுகர்வோர் மனிதவள சுற்றுச்சூழல் பாதுகாப்பு மையம் செயலாளர் சிவசுப்பிரமணியம் ஆகியோர் இணைந்து பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்களை வழங்கி பேசும்போது புற்றுநோயால் பாதிக்கப்பட்டவர்களின் ஆரோக்கியத்தை மேம்படுத்துவதற்கு நோயை எதிர் கொள்ளும் உறுதியுடன், ஊட்டச்சத்தும் அவசியம். ஆரோக்கியமாக வாழ தற்போது வழங்கிய பயறு, கொண்டைக்கடலை, சிகப்பு அவல், உலர் திராட்சை, பழங்கள் உள்ளிட்ட ஊட்டசத்து உணவுகள் தொடர்ந்து எடுத்துக்கொள்ள வேண்டும் என்றனர்.

இந்நிகழ்ச்சியில் கூடலூர், ஓவேலி, ஸ்ரீமதுரை உள்ளிட்ட அரசு ஆரம்ப சுகாதார நிலையங்களின் சேவைப் பகுதிகளைச் சேர்ந்த புற்றுநோயால் பாதிக்கப்பட்ட 30 பயனாளிகளுக்கு ஊட்டச்சத்து பெட்டகங்கள் வழங்கப்பட்டன. நிகழ்ச்சியில் பயனாளர்கள், செவிலியர்கள், ஆஷா (கிஷிபிகி) பணியாளர்கள் மற்றும் பொதுமக்கள் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டு நிகழ்ச்சியை சிறப்பித்தனர்.



# பெட்ரோல், சமையல் காஸ் விலை உயர்வை கண்டித்து சிபிஐ ஆர்ப்பாட்டம்

கிருஷ்ணகிரி, ஜூலை.1-

பெட்ரோல் மற்றும் சமையல் காஸ் விலை உயர்வை கண்டித்து, கிருஷ்ணகிரி புதிய பேருந்து நிலையம் அருகே அண்ணா சிலை எதிரில் சிபிஐ சார்பில் செவ்வாய்க்கிழமை கண்டன ஆர்ப்பாட்டம் நடைபெற்றது.

மாவட்ட துணைச் செயலாளர் சின்னசாமி தலைமை வகித்தார். மாநிலக் குழு உறுப்பினர்கள் கண்ணு, ராமமூர்த்தி, பழனி ஆகியோர் கண்டன உரையாற்றினர். ஏஐடியூசி மாவட்டச் செயலாளர் மாதையன், பழங்குடியின மக்கள் சங்க மாநிலத் தலைவர் கெம்பன் உள்ளிட்ட பலர் கலந்து கொண்டனர்.

ஆர்ப்பாட்டத்தில், பெட்ரோல் மற்றும் சமையல் காஸ் விலையை குறைக்க வேண்டும், மகாத்மா காந்தி தேசிய ஊரக வேலை உறுதியளிப்பு திட்டத்தை மேலும் பலப்படுத்தி தொடர்ந்து செயல்படுத்த வேண்டும், புதிய சட்டத்தை திரும்பப் பெற வேண்டும், திட்டத்தில் பதிவு செய்துள்ள அனைத்து தொழிலாளர்களுக்கும் ஆண்டுக்கு 125 நாட்கள் வேலை வழங்கி, நாளொன்றுக்கு ரூ.700 ஊதியம் நிர்ணயிக்க வேண்டும், அனைத்து பேரூராட்சி மற்றும் நகராட்சிகளிலும் 100 நாள் வேலைத் திட்டத்தை செயல்படுத்த வேண்டும், விவசாயக் கடன்களை தள்ளுபடி செய்து உரங்களை கட்டுப்படியான விலையில் விற்பனை செய்ய வேண்டும் என்பன உள்ளிட்ட கோரிக்கைகளை வலியுறுத்தி கண்டன முழக்கங்கள் எழுப்பப்பட்டன.



# தனியார் கல்லூரி நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்துள்ள நிலைத்தை மீட்டுத்தரகோரி மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் மனு

செங்கல்பட்டு, ஜூலை.1-

செங்கல்பட்டு மாவட்டம், திருப்போரூர் ஒன்றியம், படூர் ஊராட்சிக்குட்பட்ட ஐந்து ஏக்கர் நிலைத்தை,தனியார் கல்லூரி நிறுவனம் ஆக்கிரமிப்பு செய்து,பொதுமக்கள் செல்வதற்கு வழிமறித்து கேட் போட்டு மூடி உள்ளதாகவும், அந்த நிலம் ஊராட்சிக்கு சொந்தமான நிலம் என்று பலமுறை ஊராட்சி சார்பில் நோட்டீஸ் வழங்கியும் அதனை மதிக்காமல் கல்லூரி நிர்வாகம் செயல்படுவதாகவும்,அந்த இடத்தில் கிராமத்திற்கு சொந்தமான கோவில் உள்ள நிலையில்,திருவிழா செய்வதற்கு பெரிய சிக்கலாக உள்ளதாகவும்,தனியார் கல்லூரி நிறுவனத்தின் ஆக்கிரமிப்பிலுள்ள நிலத்தை மீட்டு தரவேண்டி ஊராட்சி மன்ற தலைவர் தாரா சுதாகர் தலைமையில்,உள்ளாட்சி மன்ற பிரதிநிதிகள்,கிராம பொதுமக்கள் என நூற்றுக்கும் மேற்பட்டோர் மாவட்ட ஆட்சியர் அலுவலகத்தில் நடைப்பெற்ற மக்கள் குறைதீர் கூட்டத்தில் மனு அளித்தனர்.



# மரக்கன்றுகள் நடவு செய்து அவற்றை பாதுகாக வேண்டும் : மாவட்ட ஆட்சியர் அறிவுரை

தேனி ஜூலை.1-

தேனி மாவட்ட ஆட்சித்தலைவர் வைத்திநாதன், செய்திக்குறிப்பில் தெரிவித்ததாவது,

சுற்றுச்சூழல் மற்றும் காலநிலை மாற்றத்துறை மற்றும் பசுமை தமிழ்நாடு இயக்கம் சார்பாக பசுமை பரப்பை அதிகரித்தல், சுற்றுச்சூழல் பாதுகாப்பு மற்றும் காலநிலை மாற்றத்தின் பாதிப்புகளை குறைக்கும் நோக்கில் பல்வேறு நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றது.

அதன்ஒருபகுதியாக, மாவட்ட ஆட்சித்தலைவர் அறிவுறுத்தலின்படி, தேனி மாவட்டத்தில் ஒவ்வொரு அரசுத்துறைகள் சார்பாக வாரந்தோறும் மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டு வருகின்றது.

அதன் அடிப்படையில் 15.06.2026 முதல் 19.06.2026 வரை 4755 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டது. அதன்தொடர்ச்சியாக கடந்த வாரம் 22.06.2026 முதல் 26.06.2026 வரை ஊரக வளர்ச்சி மற்றும் ஊராட்சித்துறை சார்பில் கருநாக்கமுத்தன்பட்டி,ஆங்கூர்பாளையம், முதலக்கம்பட்டி, மரிக்குண்டு ஆகிய ஊரகப் பகுதிகளில்

2495 மரக்கன்றுகளும், பேரூராட்சித்துறை சார்பில் குச்சனூர், மேலசொக்கநாதபுரம், போ.மீனாட்சிபுரம் உள்ளிட்ட பல்வேறு பேரூராட்சிப் பகுதிகளில் 300 மரக்கன்றுகளும் நடவுசெய்யப்பட்டுள்ளன.இதன் மூலம் மாவட்டத்தின் பல்வேறு பகுதிகளில் மொத்தம் 7550 மரக்கன்றுகள் நடவு செய்யப்பட்டுள்ளன. நடவு செய்யப்பட்ட மரக்கன்றுகள் முறையாக வளர்ச்சி அடைய தேவையான பராமரிப்புப் பணிகளும் தொடர்ந்து மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

எனவே பொதுமக்கள், தன்னார்வ அமைப்புகள், மாணவர்கள் மற்றும் அரசுத் துறையினர் அனைவரும் மரக்கன்றுகள் நடவு செய்து அவற்றை பாதுகாக்கும் பணிகளில் தொடர்ந்து ஈடுபட வேண்டும் என மாவட்ட ஆட்சித்தலைவர் மரு.இரா.வைத்திநாதன், தெரிவித்துள்ளார்.





# புதியஎருமைவெட்டிபாளையம் ஊராட்சி தேவனேரியில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல்.விஜய்பிரபு ஆய்வு

மாதவரம், ஜூலை.1-

மாதவரம் தொகுதி சோழவரம் ஒன்றியம் புதிய எருமைவெட்டிபாளையம் ஊராட்சிக்குட்பட்ட தேவனேரி பகுதியில் உள்ள குட்டையில் இப்பகுதியைச் சேர்ந்த ஒரு சிலர் மீன் வளர்ப்பிற்காக செத்த பிராணியான நாய், கோழியின் குடல் உள்ளிட்ட கழிவுகளை குட்டையின் தேங்கிய நீரில் வீசி வருகின்றனர் என்ற குற்றச்சாட்டு இப்பகுதியின் பொதுமக்களிடையே உள்ளது.

இதனால் மேய்ச்சலுக்கு சென்ற குட்டையில் நீர் அருந்திய ஆடு, மாடு உள்ளிட்ட வளர்ப்பு பிராணிகள் நோய் வந்து இறந்து விடுவதாக குறிப்பிடப்படுகிறது. இறந்து போன ஆடு, மாடுகளை கால்நடை மருத்துவர்கள் பிரேத பரிசோதனை செய்து பார்த்ததில் குட்டையில் உள்ள தேங்கிய நீர் விஷயமாக மாறி உள்ளது என்று கூறியுள்ளார்கள். அது மட்டுமல்லாமல் இந்த விஷம் நிறைந்த நீரால் பொதுமக்கள் வீடுகளில் உள்ள குடிநீரும் விஷமாக மாறி விடுமோ என்ற அச்சத்தில் இப்பகுதியில் வசித்து வரும் தவெக நிர்வாகிகள் மாதவரம் சட்டமன்ற உறுப்பினர் எம்.எல். விஜய் பிரபு கோரிக்கை மனு அளித்தனர். அதனடிப்படையில் மாதவரம் சட்டமன்ற உறுப்பினரும் தவெக திருவள்ளூர் தென்மேற்கு மாவட்டச் செயலாளருமான எம்.எல். விஜய்பிரபு இடம் கோரிக்கை மனுவில் குறிப்பிட்டுள்ள குட்டையை ஆய்வு செய்தார். இப்பிரச்னையை அரசு அதிகாரிகளின் கவனத்திற்கு கொண்டு சென்று உடனடியாக தீர்வு காண அறிவுறுத்தினார்.

ஆய்வின் போது சோழவரம் ஒன்றிய வட்டார வளர்ச்சி அலுவலர்கள் சாந்தினி, காளியம்மாள், புதிய எருமைவெட்டிபாளையம் ஊராட்சி செயலர் கே.ஆர். சுரேஷ், தவெக சோழவரம் ஒன்றிய செயலாளர் செல்வக்குமார், புதிய எருமைவெட்டிபாளையம் ஊராட்சி தவெக செயலாளர் திவாகர் உள்ளிட்ட தவெக நிர்வாகிகளும் பொதுமக்களும் உடனிருந்தனர்.



# வனமுனி ஐயனார், வனதேவதை அம்மன் குலதெய்வ திருவிழா நிறைவு

கிருஷ்ணகிரி, ஜூலை.1-

கிருஷ்ணகிரி மாவட்டம், பர்கூர் ஒன்றியம் கொல்லப்பள்ளி இருளர் காலனி அருகே பெரியமலை வனப்பகுதியில் அமைந்துள்ள வனமுனி ஐயனார் கோவிலில், ஆதிவாசி இருளர் சமூகத்தின் குலதெய்வங்களான வனதேவதை அம்மன் மற்றும் வனமுனி ஐயனார் திருவிழா கடந்த ஜூன் 16ஆம் தேதி கங்கணம் கட்டுதல், மாலை அணிவித்தல், விரதம் தொடங்குதல் மற்றும் கொடியேற்றத்துடன் தொடங்கியது.

திருவிழாவையொட்டி கரகம் சுமந்து கொல்லப்பள்ளி, காரகுப்பம் இருளர் காலனி, பூமலை நகர், ஐகுந்தம், கொத்தப்பள்ளி, போச்சம்பள்ளி உள்ளிட்ட பகுதிகளுக்கும், திருவண்ணாமலை மாவட்டம் மற்றும் எ.மோட்டூர், எம்.ஜி.ஆர். நகர் இருளர் காலனிகளுக்கும் பக்தர்கள் ஊர்வலமாகச் சென்றனர். தொடர்ந்து பெரியமலை வனப்பகுதியில் தேன், கிழங்கு, பூக்கள் சேகரிக்கும் பாரம்பரிய நிகழ்வும் நடைபெற்றது.

நேற்று வனதேவதை அம்மன் மற்றும் வனமுனி ஐயனாருக்கு சீர்வரிசை ஒப்படைக்கும் நிகழ்ச்சி, இரு கரகங்கள் சங்கமித்தல் உள்ளிட்ட சிறப்பு வழிபாடுகள் நடைபெற்றன. பச்சை ஆடை அணிந்த பக்தர்கள் நேர்த்திக்கடனாக ஆடுகளை பலியிட்டு வழிபட்டனர். சாமி வந்த பக்தர்கள் பாரம்பரிய சடங்குகளின்படி பலியிட்ட ஆட்டின் ரத்தத்தை அருந்தியும், தரையில் படுத்திருந்த பக்தர்களின் மீது கரகம் சுமந்த பூசாரி நடந்து சென்று ஆசி வழங்கியும் வழிபாடு நடைபெற்றது.

நேற்று (ஜூன் 30) காலை இரு கரகங்களும் ஆற்றில் விடப்பட்டதுடன் திருவிழா நிறைவடைந்தது. இத்திருவிழாவில் தேங்காய், கற்பூரம், வெற்றிலை, பாக்கு, ஊதுபத்தி, வாழைப்பழம் மற்றும் பிளாஸ்டிக் பொருட்கள் பயன்படுத்த அனுமதி இல்லை என்பது குறிப்பிடத்தக்கது. விழா ஏற்பாடுகளை கிருஷ்ணகிரி, வேலூர், திருப்பத்தூர் மற்றும் திருவண்ணாமலை மாவட்ட ஆதிவாசி இருளர் இன கூட்டமைப்பினர் செய்திருந்தனர்.

# ஆய்வாளர் விமலா சஸ்பெண்டுக்கு தடை: அரசு மேல்முறையீடு

சென்னை, ஜூலை.1-

லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் விமலா சஸ்பெண்ட் உத்தரவுக்கு இடைக்கால தடை விதித்த தனி நீதிபதி உத்தரவை எதிர்த்து அரசு மேல்முறையீடு செய்துள்ளது. முன்னதாக ஆய்வாளர் ராஜலட்சுமி மீதான புகாரில் வழக்குப்பதிவு செய்ததற்காக லஞ்ச ஒழிப்பு ஆய்வாளர் விமலா சஸ்பெண்ட் செய்யப்பட்டார். இந்த விவகாரத்தில் மேல்முறையீட்டு மனுவை உடனடியாக விசாரிக்கக் கோரி தலைமை நீதிபதி அமர்விடம் அரசு தரப்பு மேல்முறையீடு செய்துள்ளது

## பத்திரம் காணவில்லை

**ராணிப்பேட்டை மாவட்டம் எண் 19B தனபால் தெரு, கஸ்பா, ஆற்காடு தாலுக்கா ராணிப்பேட்டை மாவட்டம் என்ற முகவரியில் வசிக்கும் சந்திரன் மனைவி ராணி ஆகிய நான் எனக்கு சொந்தமான வீட்டு மனை பத்திரம் ஆவண எண் 1874/1983 மூலப்பத்திரம் அசல் கடந்த 10/06/2026ம் தேதியன்று மாலை சுமார் 6.30 மணியளவில் ஆற்காடு தோப்புக்கானா பகுதியில் உள்ள ஜெராக்ஸ் கடையில் நகல் எடுக்க சென்ற போது மேற்கண்ட மூலபத்திர அசல் ஆவணம் தொலைந்து விட்டது. இது குறித்து ஆற்காடு கிராமிய காவல் நிலையத்தில் 1006 2026அன்று புகார் எண் : OLC9392600027818 ஆக புகார் அளித்துள்ளேன். மேற்கண்ட அசல் ஆவணம் பற்றி தகவல் கிடைக்குமானால் காவல் நிலையத்திலோ அல்லது கீழ்க்கண்ட எண்ணிலோ தொடர்பு கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்படுகிறது.**

**இங்ஙனம் :**

**ராணி சந்திரன்**

**செல்: 9894746704**





Printed by A.PONRAJ, published ,owned by A.PONRAJ and printed at "SRI SAAI PRINTERS"No.122,Neethipathi, Rajasekaran Street,vaarasanthai road,Sivaganga and published at 6 a, madurai road Sivaganga, Sivaganga district,Editor A.PONRAJ. Ph: 8508502161